உ



தெல்லிப்பழை - தோதரை

# ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்

# திருப்பொன்னூஞ்சல்

## காப்பு

பேராரும் பிரணவத்தின் வடிவா போற்றி
பெருகுமறை மேருவெற்பில் வணங்கசெல்வா
தாராரும் மந்தாரை யறுகுவன்னி
தரித்தருளும் வல்லபையின் நாதா – பாயும்
நீராரும் தெல்லித்தோ தரவை மேவும்
நிமலிராஜ ராஜேஸ்வரி ஆடும் ஊஞ்சல்
பாராரும் செந்தமிழாற் பாடுதற்குப்
பரம்பொருளே நின்பாதம் காப்பதாமே.

1

தலங்குளிரும் செங்காலி மரத்தின் நீழல்
தவம்குளிரும் காளியென்றும் மதுரைவந்த
நலங்குளிரும் கண்ணகித்தாய் என்றும் மக்கள்
நவிலாடிச் செவ்வாயில் பொங்கலிட்டுக்
குலங்குளிரும் குளிர்த்தி பங்குனியின் வெள்ளி
கூடியிசைப் பூசைசெயக் கொலுவிருந்தாய்
இலங்கைமிளிர் தெல்லிதோதரவை மேவும்
இராஜ ரா ஜேஸ்வரியே ஆடீரூஞ்சல்

2

திசைபெருகு நான்குமறை நாண்களாக
திறல் பெருகும் ஆகமங்கள் நாண்களாக
அசைவில்லாப் பிரணவமே பீடமாக
ஆயகலை எண்ணெட்டும் மாடமாக
உசிதசிவ உபநிடதம் விட்டமாக
ஓங்கார சோதி பரி வட்டமாக
இசைவளரும் தெல்லித் தோ தரையில்மேவும்
இராஜ ரா ஜேஸ்வரியே ஆடீரூஞ்சல்

3

வழிப்போக்கர் எதிரிலே கிழவியாகி
வளர்சிலம்புப் பத்தினிகண் ணகியைப் போலும்
உழப்புகுவார் பயிர்செய்வார் கண்ணில் சோதி
உயர்கரக மாரியென்றும் காளியென்றும்
பழிப்பார்க்குத் துயர்கொடுத்தும் பத்தருக்குப்
பசிநீக்கி வளம்பெருக்கிக் கருணை செய்தாய்
எழிற்பழன தெல்லித்தோ தரசைமேவும்
இராஜ ரா ஜேஸ்வரியே ஆடீரூஞ்சல்

4

நறுமலர்ப் பங்கயவாவி நீர்த் தேக்கத்தில்
நாச்சிமார் எனும் தேவமாத மாதர் வந்து
செறிதீர்த்த மாடியுனைப் பூசைசெய்யச்
சிங்காரச் சிரிப்புடனே நிற்பாயம்மா
அறிவிழந்த தன்மகனைக் காப்பாய் என்றே
அன்னையவள் அழுதேங்க மருந்துதந்த
இறைவியே தெல்லித்தோ தரவைமேவும்
இராஜ ரா ஜேஸ்வரியே ஆடீரூஞ்சல்

5

கன்னியென யமுனையிலே சங்காய் வந்தாய்
களிமதுரைத் தடாதகை பாய்நெருப்பில் வந்தாய்
மன்னனுக்கு மலைமகளாய் வந்து ஞான
வடிவேலன் தனையணைத்த செல்வியானாய்
அன்னபரி பூரணியாய் உயிர்கள் உய்ய
அரும்பசியைத் தீர்ப்பவளே அடியார்வேண்டும்
இன்னமுதே தெல்லித்தோ தரவை மேவும்
இராஜ ரா ஜேஸ்வரியே ஆடீரூஞ்சல்

6

உமையவரும் பரமசிவனும் நிறைவு பார்க்க
ஒளிர்வேலன் கணநாதன் விருது சேர்க்க
அமையுமறை முறைபூசை பிரம்ம னாற்ற
அரங்கனுடன் மலர்மங்கை மாலை சாத்த
பூமிமகளும் அரம்பையரும் வடந் தொட்டாட்ட
புனிதமதி கதிரவன்பொற் கவிதை ஏந்த
இமையவர்சூழ் தெல்லித்தோ தரவை மேவும்
இராஜ ரா ஜேஸ்வரியே ஆடீரூஞ்சல்

7

துயர்க் கடலில் நீந்துகின்ற அன்பன் உன்னைத்
தொழுதுகனைப் பால் நினது கோயில் முன்னே
அயர்ந்து விழி உறங்குகையில் வந்தெழுப்பி
அமுதளித்துக் கருணைசெய்து வறுமைதீர்த்தாய்
பயப்படுநோய் பேய்பிணிகள் யாவும் போக்கி
பக்தர்களைக் குறைவின்றிக் காத்த தாயே
இயற்றமிழ்வாழ் தெல்லித்தோ தரவை மேவும்
இராஜ ரா ஜேஸ்வரியே ஆடீரூஞ்சல

8

வேகமுறு சும்பனொடு நிசும்பன் தன்னை
வேரறுத்து நடமாடும் காளியாகி
மேகமுறு திருவாலங் காட்டிலாடி
விடையவனின் ஊர்த்துவதான் டவத்தைக்கண்டு
மோகமுடன் அவன்பாகம் கொண்டாய் அம்மா
மும்மலம் தீர்த் துன்னடியைத் தருவாயம்மா
ஈகைமிகும் தெல்லித்தோ தரவை மேவும்
இராஜ ரா ஜேஸ்வரியே ஆடீரூஞ்சல்

9

அன்புமலர் முகமாட செவித்தோடாட
அமுதவா யாடமூக் குத்தியாட
பொன்மருவு மாங்கல்யம் பொலிமார் பாட
பொருந்துவளைக் கரமாட சடைகளாட
மின்மருவு சிலம்பாட பாதமாட
வெகுரத்ன இடைஓட்டி யாணமாட
இன்மலர்க்காத் தெல்லித்தோ தரவை மேவும்
இராஜ ரா ஜேஸ்வரியே ஆடீரூஞ்சல்

10

பார்வளரும் கலைதருவாய் ஆடீரூஞ்சல்
பார்வதியாய்ப் பவமறுப்பாய் ஆடீரூஞ்சல்
நீர்நிலம்சேர் நதி தருவாய் ஆடீரூஞ்சல்
நெஞ்சிலரு ளொளிதருவாய் ஆடீரூஞ்சல்
ஊர்செழிக்கச் சுகம்தருவாய் ஆடீரூஞ்சல்
உறுகால பயமறுப்பாய் ஆடீரூஞ்சல்
ஏர்வயல்சூழ் தெல்லித்தோ தரவை மேவும்
இராஜ ரா ஜேஸ்வரியே ஆடீரூஞ்சல்

11

ஆயிரத்தொள் ளாயிரப்பத் தெட்டாண்டின் முன்
அரசர்பணிந் தேத்தமா ருதவல் லிப்பெண்
தாயென்னைக் காத்திடுவாய் என்று வேண்டித்
தண்ணருளால் சாபவினை தீர்த்து, வண்ணத்
தூயமுக நிறைவுதந்தாய், தமிழினத்தின்
துயர்தீர்க்கத் திருவுள்ளம் பற்றொணாதோ
ஏயவளத் தெல்லித்தோ தரவை மேவும்
இராஜ ரா ஜேஸ்வரியே ஆடீரூஞ்சல்
ஆதிராஜ ராஜேஸ்வரி திருத்தாள் வாழி
அன்னையுரை அலங்காரக் கோயில் வாழி
நீதிதரு மறையாக மங்கள் வாழி
நிறைந்தபுரா ணங்கள்இதி காசம் வாழி
ஆதரவாய்ப் பரவுமடி யார்கள் வாழி
ஐந்தெழுத்து வாழி ஆ வினங்கள் வாழி
பூதலத்து மழைவாழி வளங்கள் வாழி
புகழ்பாடும் தொண்டர் குழாம் வாழிவாழி

மங்களம்

ஆனைமுக நாதனுக்கு மங்களம் மங்களம்
ஆறுமுக வேலனுக்கு மங்களம் மங்களம்
ஞானநட ராஜனுக்கு மங்களம் மங்களம்
நடனசிவ காமித்தாய்க்கு மங்களம் மங்களம்
தேன்துளப நாரணத்க்கு மங்களம் மங்களம்
சிங்கமேனும் தூர்க்கைத்தாய்க்கு மங்களம்
மங்களம்
வான்பரவு வைரவர்க்கு மங்களம் மங்களம்
மன்னுமடி யார்களுக்கு மங்களம் மங்களம்

ஆக்கியோன்: சீ. விநாசித்தம்பி M.A.

சோதிடப்பிரகாச யந்திரசாலை, கொக்குவில்.